பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: தை 2 (16—1—68) செவ்வாய் ★ வெளியூர்: தை 3 (17—1—68) புதன் [இதழ்: 178

இந்தி அழைப்பு இதழ் வந்த வழி திரும்பியது!

கோவை, ஜன. 14—

இங்குள்ள பொறியர் ஒருவருக்கு இந்தியில் அச்சடிக்கப்பட்ட அழைப்பிதழ் ஒன்று வந்தது; இந்தி தெரியாத அந்தப் பொறியர், அதனை அனுப்பியவர்களுக்கே திருப்பியனுப்பிவிட்டார்!

அனைத்திந்திய பொறியியல் பயிற்சி நிலையத்தின் சார்பில் கான்பூரில் நடைபெறவிருக்கும் அதன் துவக்க விழாவுக்காக அனுப்பப்பட்ட அழைப்பிதழ் அது என்று கூறப்படுகிறது.

இந்தி எண்களைப் பயன்படுத்தினல் தண்டனை!

தலைநகரப் போலீசுத்துறையின் காலங்கடந்த விழிப்பு

புதுடில்லி, சன. 16—

ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சிகளின் விளைவாகத் தலைநகரில் கார்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்களுக்கு இந்தி எண்கள் பொறிக்கப்படுவதைத் தடைசெய்ய டில்லிப் போலீசார் நடவடிக்கை எடுத்துள்ளனர்,

கார்களுக்கும் மற்றப் போக்குவரத்து வாகனங்களுக்கும் இந்தி எண்களைப் பயன்படுத்துபவர்களை, சட்டப்படி தண்டனைக்குள்ளாக்க வழிசெய்ய வேண்டுமென்று டில்லிப் போக்குவரத்துப் போலீசுத்துறை தெரிவித்துள்ளது.

அனைத்துநாட்டு எண்'களுக்குப் பதிலாக இந்தி எண்களைப் பயன்படுத்துவதால் பல தொல்லைகள் உண்டாகின்றன; இந்தி தெரிந்தவர்களுக்குக்கூட அந்த எண்களைச் சரிவரப் புரிந்து கொள்ள முடிவதில்லை; மேலும், போக்குவரத்துச் சாதனங்களில் பொறிக்கப்படும் இந்தி எழுத்துக்களிலும், எண்களிலும் பல பிழைகள் உள்ளன; போக்குவரத்து விதிகளை மீறிய குற்றங்களிலிருந்து காரோட்டிகள் தப்பித்துக்கொள்ளவும் இது வழி செய்கிறது.

எனவே, 'இந்தி எண்கள் பொறிக்கப்படுவதற்குத் தடை விதிக்க வேண்டும்; அரசியல் சட்டத்தில் கூறியிருப்பதுபோல் அனைத்துநாட்டு எண்களும் ஆங்கில எழுத்துக்களுமே பயன்படுத்தப்பட வேண்டும்' என்று போக்குவரத்துப் போலீசுத்துறை மேவிடத்துக்குக் கடிதம் எழுதியிருக்கிறது.

தற்போது தலைநகரின் மாநகராட்சி மன்றமும், ஆட்சிக் குழுவும், தீவிர இந்திவெறியர்களான ஜனசங்கக் கட்சியினரின் பொறுப்பில் இருப்பதால், அரசுக்கும்-மாநகராட்சிக்கும் சொந்தமான பஸ்கள், லாரிகள் ஆகியவற்றிலும் இந்தி எண்களே பொறிக்கப்பட்டிருக்கின்றன; போக்குவரத்துப் போலீசாரின் நடவடிக்கை நடைமுறைக்கு வந்துவிடுமேயானல், அவைகளுக்கும் முன்போலவே அனைத்துநாட்டு எண்களைப் பொறிக்கும்படியான கட்டாயம் ஏற்பட்டுவிடும்.

இதுவரை ஏற்பட்ட புதிய கடன் ஒப்பந்தங்கள்

புதுடில்லி, சன. 16—

1967-ம் ஆண்டில் அமெரிக்காவுடன் ரூ. 2394.36 கோடிக்கும், இரஷ்யாவுடன் ரூ. 1021.13 கோடிக்கும் இந்தியப் பேரரசு கடன் ஒப்பந்தம் செயதிருக்கிறது.

இது தவிர, இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி, உலக நிதி நிறுவனங்கள் ஆகியவைகளுடனும் கடன் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தக் கடன் ஒப்பந்தங்கள், கடந்த டிச. 31-ந் தேதிவரை செய்யப்பட்டவையாகும்.

ஏற்றத் தாழ்வை நீக்குவதற்கு ஏதும்செய்யப்போவதில்லையாம்

'மாறுதல் செய்ய இயலாது' என்கிறு[illegible] தலைமையமைச்சர் இந்திரா

புதுடில்லி, ஜன. 16—

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மொழித் தீர்மானத்தின் விளைவாக அனைத்திந்திய ஊழியர்கள் தேர்வில் இந்தி பேசுவோருக்கும்—இந்தி பேசாதவர்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வை—இந்தி பேசாதவர்களுக்கு ஏற்படக்கூடிய சுமையைக் குறைக்கும் வகையில் மொழித் தீர்மானத்தில் மாறுதல் எதையும் செய்ய மத்திய அரசு கருதவில்லையாம்.

இந்தி பேசாதவர்களுக்கு ஏற்படும் சுமையைக் கூடியவரையில் குறைக்கத்தக்க விதத்தில் அவ்வப்போது தேவையான நிர்வாகக் கட்டளைகளைப் பிறப்பித்தால் போதுமென மத்திய அர[illegible] கருத்துக்கொண்டுள்ளதாம்.

தென்னாட்டைச் சேர்ந்த அனைத்திந்தியக் காங்கிரசு உறுப்பினர்களடங்கிய தூதுக் குழுவினரிடம் தலைமையமைச்சர் திருமதி இந்திர[illegible] காந்தி இதனைக் கூறியதா[illegible] தெரியவருகிறது.

அனைத்திந்திய ஊழியர்கள் தேர்விலும், திறமையான நிர்வாகத்தை ஏற்படுத்தத்தக்க விதத்திலும் மொழித் தீர்மானத்தைச் செயல்படுத்துவது எப்படி என்பதை ஆராய குழு ஒன்று அமைக்கப்படும் என்றும் இந்திரா காந்தி தெரிவித்தாராம்.

காங்கிரசல்லாத அரசுகள்மீது காங்கிரசுக் கட்சி சுமத்தும் பழி

ஐதராபாத் மாநாட்டுத் தீர்மானம் உள்ளத் தூய்மையானதல்ல!

தி.மு.க.—சுதந்தரா ஆட்சிகளின் சிறப்பை உணர மறுப்பதேன்?

இராஜ்கோட், சன. 16—

"காங்கிரசல்லாத அரசுகள் உறுதியான உள்ளத்துடன் நடந்துகொள்வதில்லையென்றும், சட்டம் — அமைதியைப் பாதுகாப்பதில் தவறிவிடுவதாகவும கூறப்படும் அதே புகார்களை, மத்திய ஆட்சியிலுள்ள காங்கிரசு மீதும் கூற இயலும்; ஒரு வகையில் பார்க்கப் போனல், அதுவும் ஒரு கலப்பு அரசுதான்; காரணம், இணக்கமான கொள்கை அமைச்சரவையில் இல்லை; ஒவ்வொரு அமைச்சரும், ஒவ்வொரு மாதிரியாகப் பேசிவருகிருர்கள்"

என்று, நாடாளுமன்றப் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் எம். ஆர். மசானி எம்.பி. சுட்டிக்காட்டினர்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"காங்கிரசு அல்லாத அரசுகள் பற்றி ஐதராபாத் காங்கிரசு மாநாடு நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில், நன்கு நடந்துவரும் அரசுகளுக்கும்—மோசமாக நடந்துவரும் அரசுகளுக்கும் இடையில் பாகுபாடு காட்டப்படவில்லையாதலால், அத்தீர்மானம், உள்ளத் தூய்மையுடன் நிறைவேற்றப்பட்டதுதான எனச் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது!

குறைந்த அளவுக்கு இரு காங்கிரசல்லாத அரசுகளாவது, நல்ல — நிலையான ஆட்சியை ஏற்படுத்தியுள்ளன; தமிழகம், ஒரிசா ஆகிய அரசுகளே அவைகளாகும்."

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைக் கைவி[illegible] மாணவர்கள் முடி[illegible]

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை[illegible] கைவிடத் தஞ்சை, திருச்[illegible] அண்ணமலைநகர், கடலூ[illegible] கல்லூரிகளின் மாணவர்க[illegible] முடிவுசெய்துள்ளனர்.

"இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி[illegible] மீண்டும் துவங்கவேண்டாம்[illegible] எனக் கேட்டுக் கொள்ளப்ப[illegible]டிருக்கிறது.

'சாய்ந்த சாம்ராஜ்யங்களை எண்ணிப் பாரீர்!'

'ஆண்ட காங்கிரசு அழிவை நோக்கிச் செல்வதேன்?'

அரசியல் ஆதிக்கக்காரர்களுக்கு ஆச்சாரியா கிருபளானி எச்சரிக்கை

போபால், சன. 16—

"ஆட்சியில் இருந்துவந்தவர்களுக்கு இடையே இருந்து வந்த ஒற்றுமையின்மையாலும், முறைகேடான ஆட்சியாலும், கடந்த காலத்தில் பல பேரரசுகள் சிதைந்துள்ளன; இதனல் பேரரசுகள் நாசமானது மட்டுமின்றி நாடுகளும் நாசமாகியுள்ளன; இந்தச் சரித்திர கால நிகழ்ச்சி இன்று மீண்டும் ஏற்பட்டுவருவதாகத் தோன்றுகிறது"

என்று ஆச்சாரியா கிருபளானி, மத்தியப் பிரதேச சரித்திர மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

நாட்டின் வரலாற்றில் காணப்படும் படிப்பினை—களை உணருமாறு பொதுமக்களையும் அரசியல் கட்சிகளையும் கேட்டுக்கொண்டு அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"20 ஆண்டுகளாக நீடித்துவந்த காங்கிரசு ஆட்சி சிதைந்துவருகிறது: பொதுமக்கள் அதிருப்தியாலோ அல்லது கிளர்ச்சியாலோ அல்லது எதிர்க் கட்சிகளின் பலத்தாலோ இப்படி ஏற்பட்டிருப்பதாகச் சொல்வதைவிட, அதன் முறைகேடான ஆட்சியாலும், ஆட்சியாளர்க்கிடையில் ஏற்பட்டுள்ள பிளவுகளாலும் ஏற்பட்டிருப்பதாகத் தான் சொல்ல வேண்டும்.

"ஆனல், மக்கள் விழிப்புணர்வு காட்டினல், உள்நாட்டுக் குழப்பத்திலிருந்தும், அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்தும் நாட்டைக் காப்பாற்ற இனியும் இடமிருக்கிறது.

"நாட்டில் தற்போது ஜனநாயக அமைப்பு உள்ளது; ஆகையால் ஆளுங் கட்சியின் தவறுகளினல் ஏற்படும் தொல்லைகளை நாடு தாங்கிக்கொள்ளத் தேவையில்லை!"

திருடர்கள் நுழைந்த காரணத்தினல்..!

ஐதராபாத்தில் நடைபெற்ற அனைத்திந்தியக் காங்கிரசு மாநாட்டில் திருடர்கள் நுழைந்துவிட்ட காரணத்தினல், பலர், தங்களுடைய உடமைகளைப் பறிகொடுத்து அவதிக்கு ஆளாயினர்!

இம்மாநாட்டில் பல ஜேப்படிகள் நடைபெற்றிருக்கிறது; கொடியேற்று விழாவின்போது, நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாயின் தனி உதவியாளர் ரூ. 250-ஐ இழந்தார்!

ஒரு நபரிடமிருந்து ரூ. 1,500-ஐ ஜேப்படி செய்யும்போது, கையும் களவுமாக ஒரு நபர் பிடிபட்டார்,

இந்த ஜேப்படியில் ஈடுபட்ட

தமிழகச் சட்டமன்ற அவசரக் கூட்டம்

சென்னை, சன. 16—

தமிழகச் சட்டமன்றக் கூட்டம் வருகிற 23-ம் நாள் காலை 10-30 மணியளவில் நடைபெறும்.

இத்தகவலை சட்டப் பேரவைத் தலைவர் சி. பா. ஆதித்தனர் வெளியிட்டுள்ளார்.

பேர்வழி காங்கிரசுக் கட்சியின் தொண்டர் படைச் சின்னம் பொறிக்கப்பட்ட 'பாட்ஜ்' அணிந்திருந்தாராம்!

மொழி சட்டத்[illegible] மாறுதல் செய்ய[illegible]

அனைத்துக் கட்சியினரை[illegible] கூட்டி விவாதிக்க யோ[illegible]

காகினடா, சன. [illegible]

"மொழிச் சிக்கலைக் குறித்[illegible] விவாதித்து, அமைதியா[illegible] முடிவை மேற்கொள்[illegible] பொருட்டு எல்லாக் கட்சிக[illegible]யும் சேர்ந்த பிரதிநிதிகளி[illegible] மாநாடு ஒன்றினைக் கூட[illegible] வேண்டும்"

என்று, நாடாளுமன்ற மக்கள[illegible] தலைவர் திரு. என். சஞ்சீ[illegible] தெரிவித்துள்ளார்.

ஒரிசா இரயில் நிலை[illegible] செய்தியாளர்களிடை[illegible] பேசியபோது இந்த யோச[illegible] வெளியிட்டார்.

"நாடாளுமன்றத்தில் ஆட்[illegible] மொழி மசோதா நிறைவேற்[illegible] அதற்குக் குடியரசுத் தலை[illegible]ரும் ஒப்புதலும் அளித்துவிட்[illegible] இந்த நேரத்தில் இப்ப[illegible] பட்ட மாநாட்டைக் கூட்[illegible]வது உகந்ததாக இருக்குமா[illegible] என்று செய்தியாளர்கள் வி[illegible]வியதற்கு, "இதே நா[illegible] மன்றம் மீண்டும் இந்த ம[illegible]தாவைத் திருத்த மு[illegible] என்று விடையளித்தார்

நம் நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

திருவள்ளுவராண்டு 1999 தை 2 (16—1—68) செவ்வாய்

காழ்ப்பிலே இளம்பிய கருத்து!

இரண்டாவது உலகத் தமிழ் மாநாடும் கருத்தரங்கும் செவ்வனே நடைபெற்று முடிந்துவிட்டன. அம்மாநாட்டில் பங்கு கொண்டிருந்த வெளிநாட்டுத் தமிழ் அறிஞர்கள், தமிழகத்தை முழு அளவில் அறிந்திடத் தமிழக நகரங்கள் சிலவற்றை நேரில் காண்பதற்குச் சென்றுள்ளனர்.

இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கையொட்டி, தீவுத் திடலில் பூம்புகார் நகரம் அமைக்கப்பட்டு, அங்கு ஏழு நாட்கள் வரையில் தமிழ் மொழி பற்றிய கருத்தரங்கும், கவியரங்கும், இசை அரங்கும், நாட்டிய அரங்கும், கூத்தரங்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

தமிழ் மொழியின் தனித்தன்மையையும், தமிழ் மக்கள் அன்று வாழ்ந்த புகழ்மிக்க வரலாற்றினையும் இவ்வரங்குகளில் தனித்தனியாகப் பங்கு கொண்ட பேச்சாளர்களும், கவிஞர்களும், இசைக் கலைஞர்களும், நாட்டியம் கற்றவர்களும், புகழ்பெற்ற கூத்தர்களும், தாங்கள் பயின்றுள்ள கலைகள் மூலம் திறம்பட வெளிப்படுத்தினர். இவை அனைத்தையும் காணவும், கண்டு தம் முன்னோர்கள் வாழ்ந்த பெருநிலையின் உண்மையை உணரவும், தாய் மொழியாம் தமிழ் மொழியின் ஆற்றலை அறியவும், பூம்புகார் நகரில் தமிழகமே ஏழு நாட்களும் திரண்டிருந்தது,

சிற்றுண்டி, உணவு, ஓய்வு ஆகிய எவை பற்றியும் கவலை கொள்ளாமல், காலை ஒன்பது மணி முதல் நள்ளிரவு பன்னிரண்டு மணி வரையில் பூம்புகார் நகரத்து நிகழ்ச்சிகளை, இமை கொட்டாது அங்கு குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டனர்; பகுத்தறிவு பெற்றனர்; முழு மனநிறைவும் கொண்டனர்.

'பூம்புகார் நிர்மாணிக்கப்பட்டிருந்த தீவுத் திடல், இந்த அளவுக்கு இத்தகைய மக்கள் திரளைக் கண்டதில்லை' எனக் கூறும்படியாகத் தமிழ் மக்கள் அவ்விடத்தில் ஏழு நாட்களும் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கண்டு களித்திருக்கின்றனர்.

உலகத் தமிழ் மாநாடு துவங்கப்பட குறிப்பிட்டிருந்த நாளுக்கு முந்தின நாள் நடைபெற்ற ஊர்வலமும், அந்த ஊர்வலத்தில் காட்சிப் பொருட்களாகக் கொண்டுவரப்பட்டிருந்த தமிழகத்தின் பண்டைய பண்பையும் அன்பையும், அறத்தையும் நேர்மையையும், சாதனையையும் வீரத்தையும், உழவின் சிறப்பையும், வாணிபத்தின் வளத்தையும், சமயத்தின் சிறப்பையும் கவர்ச்சிகரமாகச் சித்தரித்துக்காட்டும் எழிலோவியங்களை இலட்சக்கணக்கில் ஆடவரும் பெண்டிரும், சிறுர்களும், பெருஞ்சாலையின் இருமருங்கிலும் அமைதி காத்து ஒழுங்காக நின்று கண்டனர்; தம் முன்னோர்கள் வாழ்ந்த பெருவாழ்வினை நினைத்துப் பெருமூச்செறிந்தனர்; தங்கள் தாழ்நிலை கண்டு மனம் வெதும்பினர்; மீண்டும் அம்முன்னோர்போல் புகழ்மிக்க வாழ்வு வாழ்ந்திட வேண்டும் என உறுதியும் பூண்டனர். இசைபட வாழ்ந்த தம் மூதாதையர்களின் ஓவியக் காட்சிகளைக் கண்டவர்களுக்கு மேற்குறித்துள்ள உள்ளக் கிளர்ச்சியையும் உறுதியையும்தான் கொடுத்திருக்க வேண்டும்.

பல நூற்றுண்டுக்காலத்துக்கு முன்பிருந்தும், பிற்றை நாட்களைத் தொடக்கமாகக் கொண்டு நேற்று வரையிலும் தமிழ் மொழியை அழியாது காத்தும், தமிழ் மொழியைத் தீஞ்சுவைக் கவிதைகளாலும், பிற மொழிகளில் மொழிபெயர்த்தும், புது நூற்களை ஆக்கித் தந்தும் தமிழ் மொழிக்கு வளத்தைச் சேர்த்துள்ள வெளிநாட்டு—உள்நாட்டு அறிஞர் பெருமக்களுக்கு வெண்கலச் சிலைகளும் வைக்கப்பட்டன. இப்புகழ்மிக்கச் சிலைகள் எங்கு வைக்கப்பட்டன ?—'உலகத்திலேயே எழில்மிக்கக் கடற்கரை' எனப் புகழ்ந்து பேசப்படுகின்ற மெரினா கடற்கரையில்தான் !

இவ்வளவுடன் உலகத் தமிழ் கருத்தரங்கின் சிறப்பு நின்றுவிடவில்லை; இத்தொடர்பில் தமிழ் மொழியை அடிப்படையாகக் கொண்டு நடைபெற்ற உலகக் கருத்தரங்கு சிறப்பாக நடைபெறவும், விழுமிய கருத்துக்களை எடுத்துக்கூறக் கருத்தரங்கில் பங்கு கொள்ளவந்த மற்ற நாட்டுத் தமிழ்க் காவலர்களை அகமும் முகமும் மலர்ந்து உபசரிக்கவும், தம் அறிவறிந்த காலந்தொட்டு இதுவரையில் இயல் – இசை – நாடகம் என்ற மும்மொழிக்கும் அறம் தேடித்தந்துள்ள -- தந்துகொண்டிருக்கின்ற தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் அளவிடற்கரிய அருந்தொண்டைப் புகழ்ந்து பாராட்டும் கருத்தில் அவருடைய உருவச் சிலையையும்—கல்வி கேள்விகளிலும், அறிவாற்றலிலும், புலமையிலும் அனுபவத்திலும் தனிப்புகழ் பரப்பி வாழ்ந்துவரும் தமிழ் ...தியவரைக் கொண்டு திறந்துவைக்கப்பட்டது.

இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கை ஒட்டிய இத்துணை நிகழ்ச்சிகளிலும், விண்முட்டத் தமிழ் ஓசை எழுப்பப்பட்டுள்ளது. இவ்வாறு எழுப்பப்பட்ட தமிழோசையுடன், நெஞ்சின் ஆழத்தில் ...பதித்தக்க தம் முன்னோர்கள் புகழ்மணக்க வாழ்ந்த கவின்பெரும் காட்சிகள் பலவற்றை, பல இலட்சக்கணக்கில் மக்கள் கண்டு-- ...ந்து புத்துணர்ச்சியைப் பெற்றுள்ளனர்.

ஏற்கனவே கற்றுள்ளவற்றைப் புதுப்பித்தல் அல்லது மீண்டும் ...றல் என்ற அளவில், தமிழ் மொழி பற்றிய கருத்தரங்கமும், பூம்புகார் நிகழ்ச்சிகளும், ஊர்வலத்தில் வந்த காட்சிகளும், வேறு ... நிகழ்ச்சிகளும், அவற்றைக் கண்டவர்கள், கற்றவர்—படித்துப் பட்டம் பெற்றவர்—கல்வி பெறும் வாய்ப்பினைப் பெற்றில்லாதோர் ஆகிய அனைவருக்கும் பயன்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்ச்சிகள் அனைத்தின் மூலம் மக்கள் பெற்றுள்ள கல்வி மதிப்பு, கோடி கோடியாகக் கொட்டிச் செலவிட்டாலும் கிடைத்தற்கு அரியதாகும். ஆனால், கருத்தரங்கு நிகழ்ச்சிகள் அனைத்தையும் கண்ட பல இலட்சக்கணக்கான மக்கள் பெற்றிருக்கின்ற பொருளறிவுக்கும் புத்தறிவுக்கும் பொதுமக்களிடமிருந்து ... திரட்டித் தமிழக அரசாங்கம் செலவழித்துள்ள தொகை, ... இலட்ச ரூபாய்களே ஆகும். இவ்வாறு செலவழிக்கப்படுகின்ற சில இலட்ச ரூபாய்க்கு, பலவகைக் காட்சிகளைக் ...வர்கள் பெற்றுள்ள கல்வி மதிப்பைக் கணக்கிட்டுப் பார்த்தால், தமிழக அரசாங்கம் இத்துறையில் செலவழித்துள்ள தொகை மிக மிகச் சொற்பமே ஆகும்.

தமிழகத்தின் கல்வி வளர்ச்சிக்காக, 'கிடைக்கின்ற வரி வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கை அரசு செலவழித்து வருகிறது' என, தாம் நிதி அமைச்சராக இருந்து—நிதி அறிக்கையை வெளியிட்டிருக்கின்ற ஒவ்வொரு ஆண்டும் பெருமிதமாகக் கூறி, தம்மைத் தாமே பாராட்டிக்கொண்டிருக்கின்ற சி. சுப்பிரமணியம் அவர்கள்—தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் தலைவர் பதவியைப் பெற்றுள்ள இத்தருணத்தில்—உலகத் தமிழ்க் கருத்தரங்கு நிகழ்ச்சிகளில் செலவழிந்துள்ள சில இலட்சம் ரூபாய்களைத் தமிழகத்தின் தொழில் வளத்துடன் பிணைத்துப் போட்டு, தமிழக அரசாங்கத்தைப் பார்த்து முணுமுணுத்திருப்பது, நகைப்புக்குரியதாகும்.

பல்கலைக்கழக நூற்றுண்டு விழா மண்டபத்தில் நடைபெற்ற உலகத் தமிழ்க் கருத்தரங்கு, தீவுத் திடல்–பூம்புகார் நகரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள், ஊர்வல ஓவியக் காட்சிகள், அமைக்கப்பட்டிருக்கின்ற உருவச் சிலைகள், பொருட் கலைக்காட்சி ஆகிய அனைத்தையும் கண்டதன் விளைவாக மக்கள் பெற்றுள்ள பொருள் அறிவின் கல்வி மதிப்புக்கு, மக்களிடம் நிதி திரட்டி சில இலட்சம் ரூபாய்களைத் தமிழக அரசு செலவழித்திருப்பது – சுப்பிரமணியம் அவர்கள் அறிவித்திருப்பதுபோல—தமிழகத்தின் தொழில் வளத்துக்கு ஊறு தேடிடக் கூடியதுமல்ல—தகுதிக்கு மிகுதியான செலவுமல்ல !

தமிழகக் காங்கிரசுக் கட்சியின் தலைவர் சுப்பிரமணியம் அவர்கள் முணுமுணுத்திருப்பதுபோல், 'ஊதாரி'ச் செலவல்ல ! வீண் செலவுகூட அல்ல !

கழக ஆட்சியின்பால் தமக்குள்ள காழ்ப்பைச் சிறிது நேரம் மறந்துவிட்டு, மீண்டும் உலகத் தமிழ்க் கருத்தரங்கு நிகழ்ச்சிகளை ஆராய்ந்து உண்மை அறிந்து, அறிந்த உண்மையை உணர்த்திடுவாராக—தமிழகக் காங்கிரசுக் கட்சியின் தலைவர் !

—கா. க.

பொன்னம்பலனூர்

[இரா. செழியன்]

பூவாளூர் அண்ணன் பொன்னம்பலனார் இறந்துவிட்டார் என்ற சோகச் செய்தி, நம்மைத் திகைப்பிலும் திடுக்கிடும் துயரிலும் ஆழ்த்திவிட்டது.

சில காலமாக உடல் தளர்ச்சியுற்றிருந்தார் என்றபோதிலும், இவ்வளவு விரைவில் அவரது முடிவு நம்மை வந்து தாக்கமுடியும் என்று யாரும் நினைத்துப் பார்த்ததில்லை.

'நேற்று இருந்தார் இன்று இருப்பதில்லை' என்பது உலகின் இயல்பு—காலத்தின் கடும் தீர்ப்பு—என்று அமைதி கூறிக்கொண்டாலும், தமிழினத்தின் முன்னேற்றத்துக்காக அரும்பாடுபட்ட அவர், காலம் கனியத் தொடங்கும் வேளையில் தமது கண்களை மூடிக்கொண்டார் என்பது நமது கண்களில் புனலைச்சேர்க்கிறது.

தேங்கிக்கிடந்த தமிழகத்தில் சூருவளி வேகத்தில் பகுத்தறிவுப் பிரசாரம் செய்யக் கிளம்பிய காலத்தில், பெரியாருக்கு உறுதுணையாக நின்றவர்களில் பொன்னம்பலனார் குறிப்பிடத்தக்கவர் என்று கூறலாம். வைதீகமிக்கக் குடும்பத்தில் பிறந்து—ஆசாரத்தின் இருப்பிடமாக இருந்த பொன்னம்பலனார் அவர்கள், தம்மையே மாற்றிக்கொண்டு அறிவியக்கத்துக்குத் தம்மை ஒப்படைத்து, தமிழினத்தைத் தம் பக்கம்–மறுமலர்ச்சியின் பக்கம்–மாற்றும் பெரிய பணியில் ஈடுபட்டார்.

பல நூற்றுண்டுகளாகப் படிந்துபோன நிலைமையை சில ஆண்டுகளில் மாற்றியாக வேண்டும் என்ற எண்ணத்தினாலோ என்னவோ—தமது பணியில் எல்லாவற்றிலும் பொன்னம்பலனார் மிக வேகமாக இருந்தார்; உணர்ச்சி–பேச்சு–நடை–எல்லாம் மிக வேகமாகவே அவரிடம் இருந்தன.

35 ஆண்டுகளுக்குமுன் சுயமரியாதை இயக்கக் கூட்டங்களில் பேசுவதற்குப் பொன்னம்பலனார் அவர்கள் வந்தால், 'போட் மெயில் பொன்னம்பலம்' என்று கூடியிருப்பவர்கள் ஆர்வத்துடனும் அன்புடனும் அவரை அழைத்தார்கள் !

தங்குதடையின்றி, அணைகடந்த வெள்ளமென அவருடைய பேச்சு இருக்கும்; வெள்ளத்தின் சீற்றத்தையும் புயலின் வேகத்தையும் அவரின் பேச்சுகளில் காணலாம்; அவருடைய பேச்சின் வேகம், வெறும் ஆரவாரத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல—உணர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டதாகும்.

மேடையில் மட்டுமல்ல—தனியாகப் பேசும்போதுகூட, இலக்கண வரம்பு மீருமல் விரைவாகவே அவர் பேசிவந்தார்.

"அடியேன் பொன்னம்பலம் இதோ வந்திருக்கிறேன்; நேற்று மாலை பூவாளூரை விட்டுக் கிளம்பி இன்று காலை இங்கு வந்தேன்; காலைக் கடன்கள் முடிந்துவிட்டன; சிற்றுண்டி கொண்டாகிவிட்டது; மவுண்ட் ரோடு சென்று ஒருவரைப் பார்த்துவிட்டுக் காஞ்சிபுரம் செல்லப் போகிறேன்; நாளைக் காலை சென்னை திரும்புகிறேன்; மீண்டும் சந்திக்கிறேன்; பொன்னம்பலனாரின் வணக்கம்" என்று மிக விரைவாகப் பேசிவிட்டு—நாம் மறுமொழி கூறுவதைக்கூட எதிர்பார்க்காமல் — அவர் போய்க்கொண்டே இருப்பார்.

பல குடும்பங்களிலும், பல நண்பர்களின் இனிய உள்ளத்திலும் அன்பான இடத்தைப் பெற்ற பொன்னம்பலனார், எவரையும் மறந்துவிடாமல் விரைந்து சென்று -- விரைவாகப் பேசி -- விரைவாக விடைபெற்றுச் சென்றுகொண்டிருப்பார் ! ஆனால் இன்று அவர், எவரிடமும் சொல்லிக்கொள்ளாமலேயே, விரைவாக விடைபெற்றுச் சென்றுவிட்டாரே !

உள்ள உறுதியும் உடல் வலிவும் ஒருங்கே பெற்றிருந்தார் திரு. பொன்னம்பலனார் ! சுயமரியாதை இயக்கத்தின் ஆரம்பக் காலத்தில் அவை இரண்டும் தேவைப்பட்டன ! பெரியாருக்கு அருகிலிருந்து பணியாற்றியபொழுதும், பிறகு அண்ணா அவர்களுடனிருந்து பாடுபட்டபொழுதும், அவர்களுடைய நலன்களில் -- பாதுகாப்பில் மிக்க அக்கறை காட்டிவந்தார்; எதிர்ப்புக்கள் சூழ்ந்திருந்த காலத்திலும், எதற்கும் அஞ்சாது அவர் பணிபுரிந்தார் !

பொறுப்புமிக்க பணிகள் பல அவரிடம் ஒப்படைக்கப்பட்டன; பெரியார் அவர்களுடன் இருந்தபொழுது, 'விடுதலை' இதழின் ஆசிரியராக அவர் இருந்தார்; 'நம் நாடு' இதழ் துவக்கப்பட்ட நேரத்தில், அதன் பொறுப்புகள் அவரிடம் அளிக்கப்பட்டன.

தாள் கட்டுகளை அடுக்கி வைப்பதிலிருந்து பாங்கிக் கணக்குகளைப் பதிந்து கொள்வது வரை—பத்திரிகை அலுவலகத்தில் பல்வேறு வேலைகளையும் அவர் ஒருவரே தனிப்பட நி... வகித்து வந்தார் ! பத்திரிகை வேலைகளைக் கவனிப்பதுடன் அல்லாது அண்ணா அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்போது, அவருடன் சென்று மற்ற வேலைகளையும் ஏற்றுக் கொண்டார் ! பம்பரம்போல் சுழன்று, சலியாத உழைப்பின் உறைவிடமாக அவர் இருந்தார் !

தாம் நம்பிய கொள்கைக்கு—தாம் கொண்ட உணர்ச்சிக்கு தம்மையே அவர் ஒப்படைத்துக் கொண்டார்; தமது வாழ்வில் பெரும்பகுதியைப் பொது வாழ்வில் கழித்துவிட்டார்; சலியாத உழைப்பினால் உடல் தளர்ச்சியுற்ற நேரத்தில் கூட, முழு ஓய்வு எடுத்துக்கொள்ளாமல் ஓடியாடிப் பல்வேறு பணிகளில் தம்மை ஈடுபடுத்தி, மற்றவர்களுக்கு உதவி புரிவதையே தமது வாழ்வின் அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்தார் !

பகுத்தறிவுப் பிரசாரம்—தமிழினத்தின் மறுமலர்ச்சி—திராவிடர் இயக்கம்—மொழி உரிமை—முன்னேற்றக் கழக வளர்ச்சி ஆகியவற்றில் கலந்து அரும்பாடுபட்ட பொன்னம்பலனார் அவர்கள், தமது உழைப்பின் பலன் உணரப்படும் நேரத்தில், தமது பணி முடிந்துவிட்டது என்று ஓய்ந்துவிட்டார் !

நீண்ட உழைப்பினையும், நெடுங்கால நண்பர்களையும் விட்டுப் பொன்னம்பலனார் சென்றுவிட்டார் !

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

கட்டுப்பாடு தளர்ந்ததால் உற்பத்தி அதிகரிப்பு

கல்கத்தா, சன. 16—

சர்க்கரைத் தொழில்மீதான கட்டுப்பாடு ஓரளவு நீக்கப்பட்டதால், சர்க்கரை உற்பத்தி ஊக்கப் பெற்று அதிகரித்துள்ளதாக வர்த்தக வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன.

கடந்த ஆண்டு அக்டோபரி... குறைவு நிலை ஏற்பட்டபோதிலும் டிசம்பர் மத்தியில் சர்க்கரை உற்பத்தி 4-இலட்சத்து 20-ஆயிரம் மெட்ரிக் டன்னாக இருந்தது; இது, முந்தைய ஆண்டின் அக்கால... கட்ட உற்பத்தியைவிட 4,0... மெட்ரிக் டன் அதிகமாகும்.

1967—68-ம் ஆண்டு பருவத்... மொத்த உற்பத்தி 21-இலட்ச... 50-ஆயிரம் மெட்ரிக் டன்னுக்... அதிகமாக இருக்கும் என்று மத... பிடப்படுகுறது.

மறுபுறத்தில், சர்க்கரையில்... உயர்ந்த விலை காரணமாகவும் குறைந்த விலையில் வெல்லம் கிடைப்பதாலும் நாட்டில் சர்க்... ரைத் தேவை குறைந்துள்ளது.

பொங்கல் நன்னாள் வாழ்த்துக்கள்

உழைப்பே நம் செல்வம் — அமைதியும் அன்புமே நம் கண்கள்!

உழைப்பின் பலன் கண்டு உவகை கொள்ளும் நன்னாள்—பொங்கல் நாள்! இன்று உங்களையெல்லாம் எண்ணியெண்ணி மகிழ்வெய்துகின்றேன்.

ஏர்முனை விழாவும், தமிழ் பொங்கும் விழாக்களும், தமிழகமெங்கும் இன்று இடம் பெற்றுப் புத்தாடை புனைந்து—கன்னலும், செங்நெலும் கண்டு—குழந்தையர், மகளிர் அனைவரோடும் நீங்கள் எல்லாம் இன்புற்றிருக்க வாழ்த்துகின்றேன்.

சென்னைத் திருநகரம் சென்ற சில நாட்களாகத் தமிழுக்குச் சூட்டிய புகழாரம் அறிவீர்; அதன் மனத்தோடு தாய்மொழியாம் தமிழின் பெருமை பேசும் பல்வேறு நாட்டு அறிஞர்களும் தமிழகத்தின் மூதூர்களிலே இன்று பவனி சென்றுள்ளனர்; இந்தப் பெருமையும் புகழும், நம் உயிர்த் தமிழ் பெற்றிருக்கும் மாட்சியினை இப்பொங்கலின்போது நாம் பெற்ற புதுப் பேருக எண்ணுகிறேன்.

பிரச்சினைகள் பல; சிக்கல்கள் நிரம்ப; எனினும், நீங்கலெல்லால் பணித்துள்ள பொறுப்பினை ஏற்று நடத்தி எல்லோரும் நல்வாழ்வு பெற என் பணி எப்போதும் தொடருமென்பதைத் தவிர, இந்நன்னாளில் நான் சொல்ல என்ன இருக்கிறது?

உழவர் பெருமக்களும், பாட்டாளித் தோழர்களும். மாணவ நண்பர்களும், மற்றோரும் இந்நாளில், என் மன உணர்வையே கொள்வார்களென்று நான் எதிர்பார்க்கிறேன்.

உழைப்பே நம் செல்வம்! அமைதியும் அன்புமே நம் கண்கள்! உங்களுக்கெல்லாம் என் மனம் நிரம்பிய வாழ்த்துக்கள், வணக்கங்கள்!

—முதலமைச்சர் அண்ணா

★

ஏழைகளின் வாழ்வில் சுமைகுறைந்து நம்பிக்கை மலர்ந்திருக்கிறது!

இன்று, மங்கலம் பொங்கும் பொங்கல் விழா! பயனற்றுப்போன பழம் பொருட்களை நீக்கி, புதுமைக்கு இடமளிப்பது பொங்கல் விழாவின் சிறப்பு!

இந்த ஆண்டுப் பொங்கல், புதுமைப் பொங்கல்—அண்ணாவின் அரசினைக் காணும் முதல் பொங்கல்!

புதிய ஆட்சி அமைந்தபின், இந்தப் பத்து மாதங்களில் ஏழை மக்களின் வாழ்வில் சுமை குறைந்து, நம்பிக்கை மலர்ந்திருக்கிறது! குறள்நெறி மக்களிடையே பரவத் தலைப்பட்டுவிட்டது! தென் தமிழ்—தேன் தமிழ், தரணி போற்றும் தமிழாக உயரும் நிலையைக் காணமுடிந்தது!

“தமிழக அரசு பல நல்ல திட்டங்களை அமுல்படுத்தியுள்ளது” என்று நாடாளுமன்ற அவைத் தலைவர் திரு. சஞ்சீவ ரெட்டி போன்றவர்கள் பாராட்டியிருக்கிறார்கள்.

அறத்தில் மட்டுமல்ல—அமைதியான வாழ்வில் மட்டுமல்ல—ஆட்சி முறையிலும், மக்கள் வளம்பெற்று வாழ்வதிலும் தமிழகம் உலகுக்கே எடுத்துக்காட்டாக விளங்கவேண்டும். அந்தப் பொற்காலத்தின் விளிம்பில் இன்று நாம் நடந்துகொண்டிருக்கிறோம்!

மொழிப் பிரச்சினையிலும், நாட்டை வளப்படுத்தும் ஏனைய முயற்சிகளிலும் நமது நிலை மிகத் தெளிவானது! தமிழ் நெறிதான் நமது வழி! ‘தீதும் நன்றும் பிறர் தர வாரா’ என்பது தான் அந்த நெறி!

நமக்கு நன்மை தேடிக்கொள்வதும் நம் கையில்தான் இருக்கிறது! மற்றவர்கள் நமக்குக் கேடு செய்யமுடியாது! அந்த உறுதியோடு தமிழ்ப் பெருமக்கள் அனைவருக்கும் நெஞ்சு நிறைவோடு பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

—அமைச்சர் மு. கருணாநிதி

★

உணவுத் துறையில் தமிழகம் முன்னேற்றப் பாதையில் நடைபோடுகிறது

தைத் திங்களின் முதல் நாள், தமிழர்க்குப் பெருநாள்—ஒரு திருநாள்! பொங்கல் புதுநாள்!

பொங்கல், உணவு மட்டும் அல்ல—‘தமிழருடைய வாழ்வில் வளமும் நலமும் பொங்க வேண்டும்’ என்ற நல்லெண்ணத்தை எடுத்துக்காட்டும் பொலிவுதரும் நன்னாள்!

காலமெல்லாம் வறுமையில் வாடிக்கிடந்திடுவோரும், அன்று ஒரு நாள் அகம் மகிழ்ந்து, விழா எடுத்து மகிழ்வர்; காரணம், ‘வாழ்வு வளமாகிடும்’ என்ற நிம்பிக்கையினை, அந்தப் பெருவிழா, தமிழருக்குத் தருகின்றது!

‘சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்’ என்று கூறினார் திருவள்ளுவர். இன்று உலகத்தின் வாழ்வு எப்படியெல்லாமோ மாறியிருக்கிறது; எனினும், இன்னமும் உழவுத் தொழிலே மனித நாகரிகத்திற்கு அடிப்படையாகவும், ஆதாரமாகவும் இருந்துவருகின்றது. அந்த உழவுத் தொழிலைப் பெருமைப்படுத்தும் பெருவிழாவே பொங்கல் திருவிழா!

தமிழர் தம் வாழ்வில் புதிய பொலிவினைக் காணத்துடிக்கும் தமிழக அரசு, பல்வகைகளில் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு பாடுபட்டு வருவதனை நாட்டு மக்கள் நன்கு அறிவர். ஒவ்வொரு துறையிலும் புதிய அரசின் சாதனைகள் பெருமைக்கு உரியனவாக விளங்குகின்றன.

மக்களுடைய ஒத்துழைப்பும், அதிகாரிகளின் ஆர்வமும் சேர்ந்து இணைந்து செயல்பட்ட வகையில், உழவுத் துறையில் தமிழகம் பெரிதும் முன்னேற்றப் பாதையில் நடைபோடுவதை நான் இந்த நாளில் மிக்க மகிழ்ச்சியோடு எண்ணிப்பார்க்க முடிகிறது. ‘இதேபோல் தொடர்ந்து இந்த நல்ல சூழ்நிலை நிலவும்’ என்ற நம்பிக்கையை விழா நாளில் பெறுகிறேன்.

உழவின் உயர்வைக் கூறிடும் இத்திருநாளை, ‘ஏர்முனை விழா’ வாகக் கொண்டாட வேண்டும் எனத் தமிழக அரசு நாட்டு மக்களை வேண்டியுள்ளது. ஏர், ‘எழில்’ என்ற பொருள் தரும் சொல்! நாட்டை எழில் உள்ளதாக ஆக்கிடப் பயன்படும் கருவி, ஏர் ஆகும்! ஏர், நாட்டிற்கு ஏற்றமும் தந்திடும்!

இந்த விழாவினை மக்கள் அனைவரும் எழுச்சியோடு கொண்டாடிப் பயனும் சுவையும் பெறவேண்டும் என விரும்புகின்றேன்!

நாடெங்கும் விழா விளக்கம் பெறுமாக! பால்போல் பண்பும் பொங்குமாக! வரப்புயர்ந்து நாட்டு மக்களுடைய வாழ்வு உயருமாக! ஏர்முனை, ஏற்றமும் எழுச்சியும் தருமாக!

—அமைச்சர் ஏ. கோவிந்தசாமி

★

நலிந்த வாழ்வில் நம்பிக்கை தோன்றிட தமிழ் ஆட்சிக்கு அரணாவோம்!

பொங்கற் புதுநாள் பிறந்தது! உழவர் கொண்டாடும் பெருநாள்—தமிழர்கள் கொண்டாடும் திருநாள் வந்திருக்கிறது!

நலிந்த வாழ்வில் நம்பிக்கை தோன்றிட—அலைந்த மனதுக்குச் சிறிது அமைதியும் இனிமையும் சேர்ந்திடப் புத்தரிசியை எடுத்துப் பொங்கலாக்கி -- புத்தாடை பூண்டு -- அகம் குளிர, புறம் மிளிர -- குடும்பமும் சுற்றமும், நண்பரும் நல்லவரும் ஒருங்கு கூடி மகிழ்ந்திருக்கும் நன்னாள்—பொங்கற் புதுநாள் ஆகும்!

தமிழகத்தில் இந்த ஆண்டு கொண்டாடப்படும் பொங்கல் திருவிழா, ஒருவிதத்தில் புதுமையும் இனிமையும் பயப்பதாகும்!

அறிஞர் அண்ணா ஆட்சியின்கீழ் தமிழகத்தில் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் பொங்குவதை இந்தப் பொங்கலில் நாம் காண்கிறோம்!

உதயசூரியன் எழுந்தது என்பது மட்டுமல்ல—திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது என்பது மட்டுமல்ல—நமது அண்ணன் இம்மாநிலத்தின் முதல்வராக ஆனார் என்பது மட்டுமல்ல—தமிழ் நாட்டில் தமிழுக்குரிய -- தமிழருக்குரிய ஆட்சி, முதல் தடவையாக மலர்ந்துள்ளது!

பத்து நாட்களாக உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி, பாரறிய -- பல்லோர் புகழ நல்விழா எடுத்தோம்! அதைத் தொடர்ந்து இந்தப் பொங்கற் புதுநாள் வந்துள்ளது!

சென்ற ஆண்டு இல்லாத அளவில்—வள்ளுவரும் ஔவையும், கம்பரும், கண்ணகியும், பாவேந்தர்களும், தமிழ் வளர்த்த பெரியவர்களும், பொங்கல் கொண்டாட வந்துள்ளனர்—நம்முடன் இருக்கின்றனர்!

பிடியரிசிகூடக் கிடைக்காமல் தவித்த பல இல்லங்களில், படியரிசி பெற்றுப் பாங்குறப் பொங்கலிடுவதைப் பார்க்கிறோம்!

‘இந்த நல்ல காட்சியும், இந்தக் காட்சியைத் தந்த நல்ல ஆட்சியும் மேலும் வளரும்’ என்று மக்கள் வாழ்த்தும் ஒலி, நமக்குக் கேட்கிறது!

இருள் விலக—குளிர் நீங்க—பனி கரைய—வாடை அகல—பொங்கல் வந்தது! கதிரவன் தோன்றினான்! புத்தாண்டு துவங்குகிறது!

அறியாமை இருள் விலக—வறுமை தரும் நடுக்கம்போக—சூழ்ந்து வரும் இடராகிய பனிநீங்க—வடக்கிலிருந்து வீசி நம்மையெல்லாம் துன்பத்தில் ஆழ்த்தும் இந்தி என்னும் வாடைக் காற்று ஒழிந்திட—எழுஞாயிற்றின் தோற்றம் கண்டிருக்கிறோம்.

நாட்டைக் காக்க—நலிவுகள் போக்க—நல்லதோர் எதிர்காலத்தை அமைக்க—இன்று பேரறிஞர் அண்ணா தலைமையில் தோன்றியுள்ள ஆட்சி—தமிழ் ஆட்சி தழைத்து ஓங்க நல்லதோர் அரணாக நாம் செயல்படுவோமாக!

—இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

தானியச் சேமிப்பில் புதிய முறை!

தானியங்களைக் கோணிப் பைகளில் கட்டிச் சேமிப்புக் கிடங்குகளில் வைக்கும்முறை கையாளுவதற்கு சங்கடமாக இருப்பதுடன், அதிக இடத்தையும் அடைத்துக் கொள்ளுகிறது; எனவே, எஃகுத் தகடுகளால் செய்யப்பட்ட சதுர ‘டிரம்’களில் தானியங்களைச் சேமித்து வைக்கும் முயற்சி பிரிட்டனில் மேற்கொள்ளப்படுகிறது.

ஒரு டன் கொள் அளவு உள்ள இந்த ‘டிரம்’களில் தானியத்தைச் சேமித்து வைப்பதால், குறிப்பிட்ட ஒரு கிடங்கில் கோணிகளில் வைப்பதைப்போல் இரு மடங்கு தானியத்தைச் சேமிக்க முடிகிறது. எலித் தொல்லைகளால் தானியம் நாசமாகாதது மற்றொரு நன்மையாகும்.

அரியானா இடைத்தேர்தல்

புதுடில்லி, சன. 16—

வருகிற மே 12-ல் அரியானா மாநிலத்தில் இடைத் தேர்தல் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகத் தெரிகிறது.

இம்மாநிலத்தில் உள்ள 81 தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் நடைபெறும்.

காந்தி நூற்றாண்டு விழா

இரஷ்யாவிலும் ஏற்பாடு

அடுத்த ஆண்டில் காந்தியாரின் நூறுவது பிறந்த நாளைக் கொண்டாட இரஷ்யர்கள் பெரிய ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

1956-ம் ஆண்டிலிருந்தே இரஷ்யர்கள் காந்தி, மற்றும் இந்தியாவின் தலைசிறந்த தலைவர்களான திலகர், பங்கிம் சந்திர சாட்டர்ஜி, விவேகானந்தர், இராசாராம் மோகன் ராய், ஜெகதீஷ் சந்திர போஸ், காளிதாசர், இரவீந்திரநாத் தாகூர், மிர்ஜா காலிப், திருவள்ளுவர் ஆகியோரின் பிறந்த நாள் விழாக்களைக் கொண்டாடி வருகின்றனர்.

1961-ம் ஆண்டில் இரஷ்யர்கள், கவி தாகூரின் நூறுவது பிறந்த நாள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர்.

தாகூர் இரஷ்ய வாழ்க்கையில் ஒன்றுபட்டவராகிவிட்டவர். இரஷ்யாவில் அவரைப் போன்று மாபெரும் மதிப்புப் பெற்ற வெளிநாட்டு இலக்கிய மேதை வேறு எவரும் இல்லை எனலாம்.

இரஷ்யக் கம்யூனிஸ்டுகள் தாகூர் மீதிருந்த அந்த அளவுக்கு காந்திமீது ஒருபோதும் பற்றுக் கொண்டிருந்ததில்லை; காந்தியும், 1917-ம் ஆண்டு ‘போல்ஷ்விக் புரட்சி’யின் வேகத்தை முழுமையாக உணரவில்லை!

காந்தி, போல்ஷிவிசத்தை ஒ... போதும் குறை கூறியதில்லை எ... ருலும், ‘பாட்டாளிவர்க்க சர்வா... கார’த்தை ஏற்படுத்துவதற்கா... கம்யூனிஸ்டு வன்முறைச் சித்தா... தத்தை வெறுத்தார்; சுரண்டுக... வர்களுக்கு எதிராகச் சுர... படுகிறவர்களின் சரியான ஆ... தமது அறப்போர் முறை... என்று காந்தி கருதினார்.

லெனின் மறைவுக்குப் பி... 1924-லிருந்து 1948-ல் கா... மறைந்த வரை இரஷ்யக் க... னிஸ்டுகள், காந்தியின் கருத்... செல்வாக்கை முடிந்த வகைக... லெல்லாம் ஒடுக்கப் பார்த்தன... எனினும், ஸ்டாலின் மறைவுக்கு... பின் குருஷ்சேவ் ஆட்சியில், இர... யர்கள் தங்கள் கருத்தை மாற்றி... கொண்டனர். 1955-லிருந்து இர... யர்கள், காந்தியின் மறைவு நா... யும்—பிறந்த நாளையும் நி... படுத்தி வருகின்றனர். இரஷ்யர்கள், காந்தியி... லாற்றை இரஷ்ய மொ... வெளியிடவும் செய்தனர்.

மதுவிலக்கு மா...

பிப். 9-ம் நாள் துவங்...

சென்னை, சன. ...

பிப்ரவரி 3-ஆம் நாள் மு... சென்னையில் மூன்று நாட்க... நடைபெறுவதாக இருந்த நான்... வது அனைத்திந்திய மதுவி... மாநாடு, மார்ச் 9-ஆம் ந... தள்ளி வைக்கப்பட்டிருக்க...

பல்வேறு தலைவர்கள் ... கொள்ளவிருக்கும் இம்மா... டைத் தமிழக முதலமைச்சர் ... ஞர் அண்ணா அவர்கள் ... வைக்கவிருக்கிறார்கள்.

இம்மாநாட்டையொ... ஒன்றும் வெளியிடப்படு... மதுவிலக்கு நடைமுறை... படிச் செயல்படுத்த... என்பதைப்பற்றிய கண்... றும் நடைபெறும் என... கிறது.

அரசு வச...

மின் வழங்கு நி...

சென்னை, ...

திருச்சியில் உள்ள... சென்னை மின்சார விநியோ... வனத்தைச் சார்ந்த ... மன்னார்குடி, திருவாரூர் ... அமைப்பினை வருகிற ... நாள் தமிழக அரசு... கொள்ளும்.

இந்த அறிவிப்பு, ... சிறப்புச் செய்தி இத... யிடப்பட்டிருக்கிறது.

இந்நிறுவனத்தை ... யாக்கும் பொறுப்பினை ... தமிழக அரசின் தலை... ஆய்வாளர் அவர்க... மித்திருக்கிறது.

மனிதாபிமானத்தால் பிறந்ததே கதர் இயக்கம்!

விஞ்ஞான தொழில் முன்னேற்றத்தை விரும்பாததால் அல்ல!

முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, சன. 16

"இந்தியாவில் ஆயிரக்கணக்கான கைவினைத் தொழிலாளர்கள் கிராமப் பகுதிகளில் வசிக்கின்றனர்; சகோதரத்துவ உணர்ச்சியுடன் அவர்களை வறுமையிலிருந்தும், துன்பத்திலிருந்தும் காப்பாற்ற வேண்டும்; அவர்கள் தயாரித்த பொருள்களை வாங்குவதே அதற்கு வழியாகும்; கதரையும், கிராமக் கைத்தொழில் பண்டங்களையும் பொதுமக்கள் தாராளமாக ஆதரித்து ஊக்குவிக்க வேண்டும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சன. 14-ம் நாளன்று 'குறளகம்' (கதர்—கைத்தொழில் அங்காடி) கட்டிடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

"கதர்—கிராமக் கைத்தொழில்களுக்கு அரசு—பொதுமக்கள் உதவிக்குக் காலவரம்பை நிர்ணயிப்பதற்கில்லை" என்று சுட்டிக் காட்டிய முதலமைச்சர், "கிராமக் கைத்தொழில் பொருட்கள் இன்றியமையாப் பொருட்களாக இல்லாததால், இத்துறைக்குப் பயிற்சி பெற்ற விற்பனையாளர்களை நியமிக்க வேண்டும்" என்று ...யாசனை கூறினார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்ட ...வது :—

...எழிலும் பயனும், இலட்சிய ...ற்றமும், கொண்டு விளங்கும் 'குறளகம்' எனும் பெயர், ...—கைத்தொழில் அங்காடி ...ல் பொருளை வாங்க வருவோ..., பொருளை விற்போரும் ...ச்சைக் குறைத்துக்கொண்டு ...ரியத்தை அதிகப்படுத்திக் ...கொள்ள வேண்டுமென்பதை, ...வுபடுத்தும்.

...ழகத்து வியன் பொருள்களைப் போலவே உலகின் வேறு பல நாடுகளிலும் செய்திறனால் உருவான பொருள்களுக்குச் சிறப்பிடம் அளிக்கப்படுகிறது.

இங்கிலாந்து நாட்டில் கம்பளங்கள் இவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன! ஆனால் இவற்...ல் ஈடுபட்டிருக்கின்றவர்கள் ...ான்மையோர்; நூற்றுக்கு ...வர்—ஆயிரத்திற்கு ஓரிருவர்' ...றே இருப்பர்; விஞ்ஞானத் ...ாழில் வளர்ச்சி அடைந்திருப் ...ால் அங்கு நிரம்ப வேலை ...ப்புக்கள் உள்ளன; அந்த ...லை இங்கு இல்லை; 'அந்த நிலை ...ன்னும் நமக்குக் கிட்டவில்லை ...ன்றுதான் சொன்னேன்; 'தேவையில்லை' என்று நான் சொல்லவில்லை; மகாத்மா காந்தியும் அப்படிச் சொல்லியிருக்கமாட்டார்.

...ள்ளம் நெகிழ்ச்சி அடையும் ...ம குணம் படைத்த காந்தி ... நாட்டைச் சுற்றிப் பார்க் ...யில் வேலை வாய்ப்புக் குறை ...ல் மக்கள் பட்ட அவதி ...யக் கண்டு, அவர்கள் நிலை ...யரக் கதர் இயக்கம் தோற்று ...த்தார்; 'விஞ்ஞானத் தொழில் ...ில் முன்னேற்றம் ஏற்படும் ... கைத்தொழில்களில் ஈடு ...ளோரின் எண்ணிக்கை ...ம் — பொருளாதார ...டைக்கும்' என்ற நிலை ...ருந்தால், காந்தியார் ... அப்படிக் கூறியிருந் ...ாட்டார்; கதர் இயக் ... அவர் துவக்குவதற்கு ...டைக் காரணம், மனி...ான உணர்வே ஆகும்!

... செய்யப்பட்ட இப் ...கள் வாய்ப்பும் வசதி ...ள்ளவர்களால் வாங்கப் ...வை; தேவைப் பொருள் அல்ல!

எனவே விற்பனையாளர்கள், வாங்க வருவோரிடம் நல்ல கனிவோடு—நட்புணர்வோடு பழகி அவற்றை விற்கவேண்டும்; விற்பனைத் திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

நானும், அமைச்சர்கள் கருணாநிதியும், முத்துசாமியும் இவ்விழாவில் கலந்துகொண்டது பொருத்தமா—என்று சிலர் எண்ணக்கூடும்; நாங்கள் கலந்துகொண்டது புதுமைதான்! இந்த இயக்கத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள் இருப்பார்கள்; ஈடுபாடு இல்லாத நாங்கள் வருவதை, 'புதிதாகச் சிலரைச் சேர்த்துக்கொள்ளக் கிடைத்த வாய்ப்பு' எனக் கருதவேண்டும்.

புதிய அரசு ஏற்பட்டதும், நாங்கள் கதர்த் துறையை மூடிவிடப் போகிறோம் என்ற ஓர் அச்சம் இருந்தது.

திருப்பூர் போன்ற பகுதிகளிலிருந்து பலர் என்னை வந்து பார்த்து, இந்தவிதமான அச்சத்தைத் தெரிவித்தனர்; 'ஏற்கனவே உள்ளவற்றுக்குக் காரணமற்ற குந்தகம் உண்டாக்கும் பொறுப்பற்ற அரசல்ல இது' என்று அவர்களிடம் சொன்னேன்.

கதர்த் தத்துவம் நிரந்தரமான தத்துவமாகிவிடாது; இடைக்கால நிவாரணமாகவே, அதைக் கருதவேண்டும்; இது ஒரு மனிதாபிமான முயற்சியே ஆகும். எனவே, இதை இந்த அரசு போற்றிக் காத்திடும்.

கதர் விஷயத்தில் நாங்கள் மாறிவிட்டோமா இல்லையா என்று ஆராயுமுன், கதர் எத்தனை மாற்றங்களைப் பெற்றுள்ளது என்பதை அனைவரும் உணரவேண்டும்.

'கையால் நூற்று கையால் நெய்வதே கதர்' என்ற நிலை முன்பு இருந்தது; தக்ளி இருந்தது—இராட்டை வந்தது; சர்க்கா வந்தது; அதற்குப் பிறகு, 'டெக்ஸ்டூலில் தயாரான கருவியாக இருந்தாலே நல்லது' என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

கருவிகள் பெரியதாக இருந்தாலே, அவற்றில் தயாரான பொருள்களின் விலை குறைகிறது என்பதால், அவை விரும்பப்படுகின்றன.

எனவே, மாறியிருப்பது நாங்கள் மட்டுமல்ல—கதர்த் தொழிலும் மாறிவந்துள்ளது."

கழக ஆட்சியில் கதருக்கு ஆதரவு திரண்டது எப்படி?

அமைச்சர் முத்துசாமி விளக்கம்

உள்ளாட்சித்துறை அமைச்சரும் கதர் கிராமக் கைத்தொழில் ஆயத்தின் தலைவருமான மா. முத்துசாமி அவர்கள், விழாவுக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"சென்ற ஆண்டைக் காட்டிலும் நடப்பு நிதி ஆண்டில் கதர் விற்பனை ரூ. 10 இலட்சம் அளவுக்குக் கூடியிருக்கிறது; இது எப்படிச் சாத்தியமாயிற்று?—'கதர் என்பது எந்த ஒரு தனிக் கட்சிக்கும் சொந்தமல்ல; எந்த ஒரு அரசியலுக்கும் அது சின்னமல்ல' என்று எடுத்துரைத்து மக்களனைவரது ஆதரவையும் திரட்டியதால்தான்!

கதர் மட்டுமல்லாமல், கிராமங்கள் மிகுந்துள்ள இந்நாட்டில் கிராமக் கைத்தொழில்களும் நமது கவனத்தைப் பெறத்தக்கவையாக உள்ளன; அனைத்து இந்தியாவிலும் இத்துறை, தமிழகத்தில் சிறப்புறச் செயல்பட்டு வருகின்றது; அனைத்து இந்திய கதர்க் குழுவினர் இன்னும் அதிக நிதியை இம்மாநிலத்துக்கு ஒதுக்கித் தருவார்களானால் இன்னும் சிறப்பாகச் செய்ய இயலும்!

இங்கு இத்துறையில் பணியாற்றும் ஊழியர்கள், காய்தல் உவத்தலின்றிச் செயல்படவேண்டும்; நிலுவையையெல்லாம் நீக்கி சரிவரக் கடமையாற்ற வேண்டும்; மேலும் மேலும் கோரிக்கைகள் எழுப்புவதில் பயனில்லை. தமிழக அரசு தக்க நேரத்தில் ஊழியர்களின் நிலையை கவனித்து ஆவன செய்யும்; 'கதர்த் துறை என்ன ஆகுமோ' என்ற அச்ச உணர்ச்சி நீக்கி மன உறுதியோடு செயலாற்ற வேண்டும்."

பரந்த மனத்தின் பெருந்தன்மையால் ஏற்பட்ட விளைவு!

பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது :—

கதர் — கிராமக் கைத்தொழில் பொருட்களை மக்கள் விரும்பி வாங்கிடத் துணைசெய்யும் இத்தகைய விற்பனை நிலையங்கள் தமிழகமெங்கும் பரவலாக ஏற்பட வேண்டும்; தமிழக அரசு அதற்கான உதவிகளைச் செய்திடும்.

'இவர்கள் வந்தால் கதரின் நிலை என்னவாகுமோ' என்று கேள்விக்குறி எழுந்தது; அதற்கு விடையும் கிடைத்தது; இவ்வாண்டு கதர் பத்து இலட்சம் ரூபாய்க்கு அதிகமாக விற்றுள்ளதை இங்கு தெரிவித்தார்கள்; இது எப்படி? திடீரென்று ஏற்பட்டதா?

இங்கு போர்த்தப்பட்டபட்டாடைகளைப் பார்த்தீர்கள்; முன்பெல்லாம் இம்மாதிரி கறுப்பும்-சிவப்பும் சேர்ந்தாற்போல வந்திருந்தால், அவை விற்பனை நிலையத்தையே எட்டிப் பார்த்திராது!

பரந்த மனத்தின் பெருந்தன்மையின் பெட்டகமாக விளங்கும் அறிஞர் அண்ணா அவர்கள், 'கதர் எந்த ஒரு கட்சிக்காரருக்கும் சொந்தமானதல்ல' என்று—கட்சி சார்பற்ற முறையில் அணுகுகிறார்கள்; அதற்கு அடையாளச் சின்னமாகவே பத்து இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாகக் கதர் விற்பனை ஆகியிருக்கிறது.

கிராமங்களில் புத்தொளியை உருவாக்கிடவே காந்தியார் கதர்க்கொள்கையை வகுத்தார், காந்தியாரின் இக்கொள்கை வேறெந்த மாநிலத்தைக் காட்டிலும் தமிழகத்தில் விடாது பின்பற்றப்படுகிறது.

கதரை எடுத்துக்கொண்டால் பீகார் முதலிடமும், தமிழகம் இரண்டாவது இடமும் வகிக்கின்றன. கதர்—கிராமக் கைத்தொழில் பொருள்கள் இரண்டையும் எடுத்துக்கொண்டால் தமிழகமே முதலிடம் வகிக்கிறது!

அதேபோல், காந்தியாரின் கொள்கையான மதுவிலக்கைப் பின்பற்றுவதிலும் பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகம் உறுதியாகக் கடைபிடித்துவருகின்றது.

'இன்னின்ன நேரத்துக்குள் இன்னின்ன கடைகளில் மது விற்கலாம்' என்று மதுவிலக்கைப் பிற மாநிலங்களில் தளர்த்திக் கொண்டிருக்கும்போது, இங்கே அறிஞர் அண்ணா அவர்கள், 'எது வந்தாலும்—என்ன நடந்தாலும் மதுவிலக்கைத் தளர்த்த முடியாது' என்று அந்தக் கொள்கையை நிறைவேற்றிவருகிறார்கள்!"

62-வது பார்க்பேர் பொருட்காட்சி

எஸ். ஐ. ஏ. ஏ. மைதானம் — சென்னை-3

17—1—68 புதன்கிழமை மாலை 4 மணிக்கு ரேக்ளா பந்தயம் நடைபெறும்

மாலை 6-30 மணிக்கு

'இலங்கேஸ்வரன்' மனோகர் நடிக்கும் நேஷனல் தியேட்டர்சாரின் 'மாலிக்காபூர்' சரித்திர நாடகம் நடைபெறும்

கட்டணம் : ரூ. 3, 2, 1

தி.மு.க.-வின் 18 ஆண்டுச் சாதனையைக் காணத் தவறாதீர்

நடக்க இருப்பவை

பொங்கல் விழா பொதுக்கூட்டங்கள்

17--1--68

திண்டுக்கல்

நகர தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு செக்கடித் திடலில்; தலைவர் : வே. மாசிலாமணி; பேசுவோர் : கே. ஆர். பி. மணிமொழியன், எஸ். பி. மணிமொழியன்.

சிவகாசி

அண்ணா மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு மாரியம்மன் கோவில் திடலில்; தலைவர் : வெ. வேலாயுதம்; பேசுவோர் : கே. துரைப்பாண்டியன் எம்.சி., எம். மதுரைவீரன் எம்.சி., வே. கருணாகரன், ஏ. துரைக்கண்ணனன், கருக்குவேல்ராசன்.

மதுரை

கோ. சு. மணி நினைவு மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு இசுமாயில்புரம் 12-வது தெருவில்; தலைவர் : சி. கோவிந்தராசன்; பேசுவோர் : கு. திருப்பதி பி.ஏ. பி.எல்., ஏ. எஸ். கலைநேசன், எம். மதுரைவீரன், மு. செல்வம். (கருப்பையா – பாலன் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

நாகை

அண்ணா படிப்பகச் சார்பில் மாலை 6 மணிக்கு பாரதி மார்க்கெட் பின்புறம்; தலைவர் : வி. இராமன்; பேசுவோர் : வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., என். தர்மலிங்கம் எம்.எல்.ஏ., எஸ். தியாகராசன் பி.ஏ.பி.எல்., ஏ. அம்பலவாணன், எஸ். எம். இராமசாமி எம்.சி., ஈ. வெள்ளைத்துரை.

புதுக்கோட்டை

எம்.ஜி.ஆர். ரசிகர்கள் குழுச் சார்பில் மாலை 6 மணிக்கு திலகர் திடலில்; தலைவர் : எம். கோவிந்தன்; பேசுவோர் : நடிகர் கே. கண்ணன், அ. தியாகராசன் மற்றும் பலர். (கோவில்பட்டி தேவராசன்–நிர்மலா குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

புலவர் அறிவுடைநம்பி

நிகழ்ச்சிகள்

சன. 17, 18 : கோவை; 20 : பொத்தனூர்; 21 : திருப்பூர்; 23 : தாம்பரம்; 24 : கடலூர் வட்டம்; 25, 26 : கோவை—தொண்டாமுத்தூர் தொகுதி; 28 : குருவிக்கரம்பை; பிப். 4 : ஆமதாபாத்; 6, 7, 8 : பம்பாய்.

வெ. கண்ணன்

சுற்றுப்பயணம்

சன. 17 : விருதுநகர்; 18 : ஒட்டன்சத்திரம்; 19 : இரத்னபுரி; 20 : திருவேங்கடம்; 21 : சாத்தூர்; 23 : கரூர்; 24 : சேலம்; 26 : அரிசிப்பாளையம்; 28 : மதுக்கூர்; 29 : செல்லூர்—மதுரை; 30 : கரூர்; 31 : கீழப்பழுவூர்.

இரா. செழியன்

அறிவிப்பு

முக்கியக் கழக அலுவல்கள் காரணமாக இரா. செழியன் எம்.பி. அவர்கள் குடந்தை நாடாளுமன்றத் தொகுதியில் 16—1—68 முதல் 21—1—68 வரை மேற்கொள்ள இருந்த சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்துசெய்யப்படுகின்றன என்று அறிவிக்கப்படுவதுடன், சம்பந்தப்பட்டவர்கட்கு வேறு தேதிகள் தரப்படும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மதுரை மாவட்ட தி. மு. க. புது அலுவலகத் திறப்பு விழா

மதுரை மாவட்ட தி. மு. கழகப் புதிய அலுவலகத் திறப்பு விழா 8-பி. கல்பாலம் ரோடு யானைக்கல் எனும் இடத்தில் 17—1—68 காலை 9-30 மணியளவில், மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள் தலைமையில் உள்ளாட்சித்துறை அமைச்சர் எம். முத்துச்சாமி அவர்கள் திறந்து வைப்பார்கள்.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

...து பிரிவால் துயருறும் அவருடைய தம்பி...ம், உற்றார் உறவினர்க்கும் ஆறுதல் ... வேண்டும் என்றாலும், அவரைத் தமது ...த்தில் ஒருவராக ஏற்றுக்கொண்டவர் ...லாயிரவர் இருக்கிறோம்; நமக்கு நாமே ...் கூறிக்கொண்டாலும், பொன்னம்பல... உழைப்பும், கொண்ட கொள்கைகளும் ... சென்ற பணிகளும் நம்முன் நிற்...!

அவரது கொள்கையைப் பின்பற்றி நிற்பதும், அவரது நற்பணியைத் தொடர்ந்து செய்வதும்தான் அவருக்கு நாம் செலுத்துகிற வணக்கமாகும்!

பூவாளூர் பொன்னம்பலனார் பூவுலகைவிட்டுச் சென்றார்! பொலிவுற்ற உழைப்பினையும், பொன்னான கொள்கையினையும் தந்துவிட்டுச் சென்றுள்ளார்!

மறைந்தார் பொன்னம்பலனார்! வாழ்க—அவர் உள்ளம்; வளர்க—அவர் பணி!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை—13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.